ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1717/6 - 2011 අගෝස්තු 02 වැනි අඟහරුවාදා - 2011.08.02
*1717/6 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ - 19/72.*

### 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்பும் கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டம்

*1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்பும் கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் பெருந்தெருக்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மகிந்த ராஜபக்ஷ,*
*துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சர்.*

*கொழும்பு ,*
*2011, யூலை 18.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் கப்பற் சரக்கனுப்பும் மற்றும் கலன் செயற்படுத்தா பொதுக்காவுநர்களுக்கான (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 2012, சனவரி 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2. கப்பற் சரக்கனுப்புநராக அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநராகவும், தொழிலை கொண்டு நடாத்த விரும்புகின்ற கம்பனி ஒவ்வொன்றும் இதற்கான அட்டவணையில் பொருளளவில் தரப்பட்டுள்ள படிவத்தில் வணிக கம்பற்சேவை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு (இதனகத்துப்பின்னர் ''பணிப்பாளர் தலைமையதிபதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அது சார்பான உரிமமொன்றிற்காக விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.*

*3. உரிமமொன்றிற்கான விண்ணப்பமொவ்வொன்றும், விண்ணப்பத்தை முறை வழிப்படுத்தும் நோக்கத்திற்காக ஆணையாளர் தலைமையதிபதியால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா தகவலையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இயைபான கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.*

*4. உரிமமொன்றிற்கான விண்ணப்பமொவ்வொன்றும் விண்ணப்பதாரர் கம்பெனி கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் ஏதேனும் மாற்றம் மீதான தகவலை, காலதாமதமின்றி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு கொடுத்துதவுதல் வேண்டுமென தெரிவிக்கும் எழுத்திலான கூற்றொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.*

5. கம்பெனியெதுவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க. கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதும் அல்லது மீள்பதிவு செய்யப்பட்டதுமான பொறுப்பு வரையறுக்கப்பட்ட பகிரங்க அல்லது தனியார் கம்பனியொன்றாக இருந்தாலன்றி, கப்பற் சரக்கனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர் ஒன்றின் தொழிலை கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்றிற்கு தகவுடையவராதலாகாது. அக்கம்பனியில் பெரும்பான்மையான பணிப்பாளர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அக்கம்பனியின் வாக்களிக்கும் உரிமையைக் கொண்ட வழங்கப்பட்ட பங்குகளின் அறுபது சதவீதமானவை இலங்கைப் பிரசைகளால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனியில் பங்குகளை வைத்திருக்கின்ற இலங்கைப் பிரசையொருவர் அத்தகைய பங்குகளை இலங்கைப் பிரசை அல்லாதவொருவரின் நியமத்தராக அல்லது நம்பிக்கை பொறுப்பாளராக அல்லது முகவராக வைத்திருப்பின் அவர் அத்தகைய பங்குகளை அல்லது அதன் பாகத்தை வைத்திருப்பவராக கருதப்படுதலாகாது.

ஆயின் மேலும் அத்தகைய கம்பெனி, பணிப்பாளர்- தலைமையதிபதியினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படின் அத்தகைய பங்குதாரர்களிடமிருந்து சத்தியக்கடதாசி என்ற வகையில் அதற்கான எண்பிப்பை கொடுத்துதவுதல் வேண்டும்.

6. ஏற்றிச் செல்லலிற்கான ஆவணமொன்றை அல்லது சரக்கனுப்புநரின் கப்பற் சரக்கு பற்றுச்சீட்டினை அல்லது மொத்த கட்டமைப்புசார் சேவைகள் உள்ளடங்கலாக சர்வதேச பொருட் கொண்டு செல்லலுடன் தொடர்புபட்ட வேறு எல்லா சேவைகளையும் வழங்குகின்ற கப்பற்சரக்கு அனுப்பும் அல்லது கலன்செயற்படுத்தாப் பொதுக் காவுநர் ஒன்றின் விண்ணப்பதாரருக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைய "ஏ வகுப்பு" வகுதி உரிமம் வழங்கப்படுதல் வேண்டும்.

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி சார்பாக ஐந்து இலட்சம் ரூபா ( 5,00,000 ரூபா) பணப் பெறுமதிக்கான வங்கி உத்தரவாதமொன்று வழங்கப்படுதல் ;

(ஆ) சர்வதேச போக்குவரத்து சேவைகள் துறையில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள பதவி நிலை அலுவலரொருவர் பணியாட்டொகுதியில் தொழிலுக்கமர்த்தப்படுதல் ;

(இ) விண்ணப்பதாரர் இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்துடன் கப்பற்சரக்கனுப்புநராக பதிவு செய்யப்பட்டிருத்தல் ;

(ஈ) விண்ணப்பதாரர், பணிப்பாளர் - தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி கம்பெனியொன்றிலிருந்து சரக்கனுப்புவோரின் "அனைத்து அபாயப் பொறுப்பு" காப்புறுதி மேவுகையாக ஆகக் குறைந்தபட்சம் நூறு ஆயிரம் அமெரிக்க டொலர்களும் (1,00,000- US$) பிழைகள் மற்றும் தவிர்வுகள் தொடர்பாக ஆகக் குறைந்தபட்சம் ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்களும் (50,000 US$) காப்புறுதி மேவுகையாக வைத்திருத்தல் ;

(உ) அபாயகரமான கப்பற் சரக்குகளை கையாளல் உள்ளடங்கலாக, ஆகாய மார்க்கமாக அல்லது கடல் மார்க்கமாக கப்பற் சரக்குகளை கையாளலில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து தொழில்சார் பயிற்சினை பூர்த்தி செய்துள்ளவர்களும், செல்லுபடியான சான்றுப்படுத்துகையை கொண்டுள்ளவர்களுமான ஆகக் குறைந்தபட்சம் இருவர் அதன் நிரந்தரமான பணியாட்டொகுதியில் இருத்தல் ;

(ஊ) பொறுப்பு காப்புறுதி மேவுகையை வழங்குவதற்கு அல்லது கப்பற்சரக்கு அனுப்புநர் கழகத்தின் சர்வதேச சம்மேளத்தின் ஏற்று பொருட்பட்டியல்களை வழங்குவற்காக இலங்கைக் காப்புறுதி கம்பெனிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறானவையும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட "நியம வர்த்தக நிபந்தனைகளுடன்" இணங்கியொழுகுதல் ;

7. ஏற்று பொருட் பட்டியல், இல்ல ஏற்றுபொருட்பட்டியல், கடல் மார்க்கமான பட்டியல், ஆகாய மார்க்கமான பட்டியல், இல்ல ஆகாய மார்க்கமான பட்டியல், பல் போக்குவரத்து முறைக்குரிய ஆவணம், சரக்கனுப்புவோர் கப்பற்சரக்கு பற்றுச்சீட்டு எனும் அத்தகையவாறான சர்வதேச கப்பற் சரக்கு போக்குவரத்திற்கான ஏற்றிச் செல்லல் ஆவணங்களை வழங்குதல் தவிர்ந்த, கப்பற்சரக்கு மற்றும் போக்குவரத்து தொடர்பான சேவைகளை கொண்டு நடாத்துவதில் ஈடுபட்டுள்ளவொன்றான விண்ணப்பதாரருக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைய "பி வகுப்பு" வகுதி உரிமம் வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி சார்பாக இருநூற்றைம்பதினாயிரம் (2,50,000 ரூபா) ரூபாவுக்கான வங்கி உத்தரவாதமொன்று வழங்கப்படுதல் ;

(ஆ) விண்ணப்பதாரர் இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்துடன் கப்பற் சரக்கு அனுப்புநரொருவராக பதிவு செய்யப்பட்டிருத்தல் ;

(இ) பொறுப்பு காப்புறுதி மேவுகையை வழங்குவதற்கு அல்லது கப்பற்சரக்கு அனுப்புநர் கழகத்தின் சர்வதேச சம்மேளத்தின் ஏற்றுபொருட் பட்டியல்களை வழங்குவதற்காக இலங்கைக் காப்புறுதி கம்பனிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டனவும் பணிப்பாளர் - தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டனவுமான “நியம வர்த்தக நிபந்தனைகள்”.

8. (1) இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளில் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் முன்னரே இல்லாதாக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்டு இருந்தாலன்றி எந்த ஆண்டு தொடர்பில் அத்தகைய உரிமம் வழங்கப்பட்டதோ அந்த ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாள் வரையும் செல்லுபடியானதாதல் வேண்டும்.

(2) கப்பற் சரக்கு அனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர் ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபா (10,000 ரூபா) வருடாந்த உரிமக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் ;

9. (1) உரிமமொன்றைப் புதுப்பித்தற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் ஆக்கப்படுதல் வேண்டும்.

(2) உரிமமொன்றைப் புதுப்பித்தற்கான விண்ணப்பமொவ்வொன்றும் முன்னுறும் ஆண்டின் நவெம்பர் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன் செய்யப்படுதல் வேண்டும்.

10. கப்பற் சரக்கு அனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநரொருவரின் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற உரிமம் பெற்ற ஒவ்வொன்றும் பொதுமக்களின் நலன்கருதி பணிப்பாளர் தலைமையதிபதியினால் காலத்துக்கு காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டு நெறிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்தலில் அல்லது சத்தியக்கடதாசியில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல் அல்லது விபரம் பிழையானது அல்லது பொய்யானதெனக் காணப்படுகின்றவிடத்து, பணிப்பாளர் - தலைமையதிபதி அத்தகைய கம்பெனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்க அல்லது அதனை மீளப்பெற அல்லது இடைநிறுத்த அல்லது அத்தகைய கம்பெனிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் சிறப்புரிமையை பயன்படுத்துவதை மீளப்பெற அல்லது இடைநிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

## அட்டவணை

(ஒழுங்குவிதி 2 மற்றும் 10 (2))

## கப்பற்சரக்கனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர் ஒன்றின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்றிற்கான அல்லது உரிமத்தை புதுப்பித்தற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
2. பதிவு செய்யப்பட்ட முகவரி :----.
3. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும் ;

(i) கம்பெனி பதிவு இல :..........................................................................................................................

(ii) கூட்டிணைக்கப்பட்ட திகதி :..............................................................................................................

4. பிரதான தொழில் இடத்தின் முகவரி :----.
5. தொலைபேசி இல. :.................... தொலைநகல் இல. :....................... மின் அஞ்சல் முகவரி :...........................
6. தனியார் கம்பனியா அல்லது பகிரங்க கம்பனியா என்பதைக் குறிப்பிடவும் :.........................................

**அட்டவணை** (தொடர்ச்சி)

7. கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனம் :..................................................................................................
8. ஏதேனும் வெளிநாட்டு பங்குத்தொகுதி எவையேனும் இருப்பின் அவற்றின் விவரங்கள் :................................................
9. வங்கி உத்தரவாதத்தின் விவரங்கள் :......................................................................................
10. இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடனான பதிவு இலக்கம் :.................................
11. அனைத்து அபாயப் பொறுப்பு காப்புறுதி மேவுகையின் விபரங்கள் :............................................................................
12. ஆறாம் ஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிநிலை அலுவலரொருவரின் பெயரும் சர்வதேச போக்குவரத்து சேவைகள் துறையில் அவரது அனுபவமும்:...................................................................................
13. முன்னைய உரிம இலக்க விவரங்கள் (ஏற்புடையதாயின்) ....................... ஆண்டு ..................
14. கடந்த மூன்று ஆண்டுகளில் கப்பற்சரக்கு அனுப்புநர்/கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநரான விண்ணப்பதாரரால் இலங்கையில் கையாளப்பட்ட கப்பற் சரக்கின் அளவு (தயவு செய்து ஒவ்வொரு ஆண்டு தொடர்பிலும் விபரங்களை தனித்தனியாக தரவும் ).

பணிப்பாளர் சபையினதும் கம்பனி தொடர்பான விடயங்களிலுமான ஏதேனும் மாற்றங்களை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிப்பதற்கு நாம் பொறுப்பேற்கின்றோம்.

இவ் உரிமத்தினால் மேவப்படுகின்ற செயற்பாடுகளை கையாளலுக்கான எழுத்திலான சட்டம் தொடர்பிலான ஏற்பாடுகளை நாம் முழுமையாக அறிந்துள்ளோம் என உறுதிப்படுத்துகின்றோம்.

1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற் தொழில் முகவர்களுக்கு கப்பற் சரக்கனுப்பும் கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர கப்பற்றொழில் முகவர் அல்லது கொள்கலன் செய்ற்படுத்துநராக செயற்படுவதாக கொள்ளப்படுகின்ற ஏதேனும் கம்பனி, பங்குடைமை தனியாள் அல்லது கூட்டுத்தாபனத்திற்கு ஏதேனும் சேவைகள் எம்மால் வழங்கப்படமாட்டாது என இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ள எல்லா கூற்றுக்களும் எமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் சரியானவையுமென நாம் வெளிப்படுத்துகின்றோம்.

பணிப்பாளர் பணிப்பாளர்களின் பெயர்/பெயர்களும்/கையொப்பம்/கையொப்பங்களும்.

திகதி :...............................

**குறிப்பு**:- இயைபான எல்லா சான்றிதழ்/கூற்றுக்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

8- 418

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.